பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

...ர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 15 சனிக்கிழமை (01.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 277

# வர்த்தகச் சலுகைகளை விலக்க ஐரோப்பிய ஒன்றியம் முன் முயற்சி

## ஆடை ஏற்றுமதி வரிவிலக்கு ரத்தாகும்?

கொழும்பு, செப்.1

...லங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதான ...ில் அமைதித் தீர்வு காண்பதிலும், நாட்டில் மனித ...களைப் பேணு வதிலும் கொழும்பு அரசு பொறுப் ...வோடு செயற்படவில்லை என்று அதிருப்தி கொண்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றியம், இது தொடர்பான தனது அதிருப்தியையும் விசனத்தையும் இலங்கைக்கு உணர்த்தும் வகையிலும் அழுத்தம் ஒன்றை இலங்கை மீது பிரயோகிக்கும் விதத்திலும் சில நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகி வருவதாகத் தெரி கின்றது.

...பெரும்பாலும் வர்த்தக விவகாரங்கள் தொடர் ...ன சில வரிச்சலுகைகளை விலக்கி, இலங் ...கைக்கு அழுத்தத்தைக் கொடுக்க அது ...மானிப்பதற்கு வாய்ப்புகள் அதிகரித்திருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

இலங்கையின் பெரும் அந்நிய செலாவணி வருமானம் இப்போது ஆடைத் தொழிற்சாலைகள் மூலம் ஏற்றுமதியாகும் தைக்கப்பட்ட ஆடைகளில் இருந்து கிடைக்கிறது.

இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் ஆடைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் விசே–

(08ஆம் பக்கம் பார்க்க)

## காஸ்விலை மீண்டும் உயர்ந்தது!

கொழும்பு, செப். 01

சமையல் எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 213 ரூபாவால் கூடியுள்ளது. இதன்படி சமையல் எரிவாயுவின் புதிய விலை 1,298 ரூபாவாகும்.

இந்த ஆண்டில் காஸ்விலை மூன்றா

(08ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் மூவர் கடத்தல்

கொழும்பு, செப். 01

மன்னார் நகரப் பகுதியில் நேற்று நண் ...ல் 12 மணியளவில் இரு முஸ்லிம்களும் ...மிழர் ஒருவரும் இனந்தெரியாத நபகர் ...ினால் வெள்ளைவானில் கடத்திச் செல் ...பட்...ருக்கின்றார்கள் என்று இணையத் ... செய்திகள் தெரிவிக்கின்றன.

...ட டோச் சாரதிகளான இரு முஸ்லிம் ...ும் மன்னார் நகர பஸ்தரிப்பிடத்திலும், ...த்தகரான தமிழர் மன்னார் நகரத்தி ...ள அவரது வர்த்தக நிலையத்திலிருந் ... கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்று ...ரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக அவர்களது உற ...னர்கள் மன்னார் பொலிஸில் முறைப் ...டு செய்துள்ளனர். (சி)

## ஐ.தே.கட்சி - மங்கள அணி கூட்டுக்கு முழு ஆதரவு வழங்க சந்திரிகா தயார்!

### நேற்று சமரவீர, சிறிபதியுடன் அவர் விரிவாகப் பேச்சு



கொழும்பு, செப். 01

ஐ. தே. கட்சித் தலைவர் ரணில் - மங்கள கூட்டில் உருவாக்கப்பட்டுள்ள 'தேசிய சபைக்கு' முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது முழு ஆதரவையும் வழங்க முன்வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு அமைப்பாளர்களான மங்கள சமரவீரவும் ஸ்ரீபதி சூரி யா



ராய்ச்சியும் நடத்திய சந்திப்பின்போதே சந்திரிகா மேற்படி ஆதரவை வழங்க முன்வந்தார்.



இந்தச் சந்திப்பு நேற்றுக்காலை முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. மூவரும் விரிவான பேச்சுகளில் ஈடுபட்டனர் என மங்கள தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உண்மையான ஸ்ரீல.சு.கட்சியின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம் இருந்த இளவாலை இளைஞன் செவ்வாயன்று இங்கு திருப் பி அனுப்பப்படுவார்

### ஏற்பாடுகளை செய்கிறது பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு

- லண்டனில் இருந்து குமரன் -

லண்டன், செப். 1

...பிரிட்டனில் அகதி அந்தஸ்து விண்ணப் ...ிராகரிக்கப்பட்ட நிலையில் இளவா ...யைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை ...கைக்கு திருப்பி அனுப்ப பிரிட்டிஷ் ...றை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கைக்குத் திரும்பி அனுப்பினால், உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாக நேரிடும். எனவே தம்மை திருப்பி அனுப்பவேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து உண்ணா விரதப் போராட்டம் நடத்திய இளவாலையைச் சேர்ந்த ஜூட் கிறிஸ்ரி என்ற இளைஞரே நாடு கடத்தப்பட உள்ளார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அவரை நாடு கடத்தத் தேவையான பயண ஏற்பாடுகளை உள்துறை அமைச்சு செய்துள்ளது.

ஜூட் கிறிஸ்ரியை நாடு கடத்துவதற்குகாக அவருக்கான பயணச்சீட்டு, பயணப் பதிவு

(08ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலையில் நேற்று கிளைமோர் தாக்குதல்

மன்னார், பேசாலைப் பகுதியில் நேற்று மாலை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்திருக்கிறார்.

சம்பவத்தின்பின்னர் அந்தப் பகுதிப் போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தன. அத்துடன், அப்பகுதியில் கடற்படையினரும், பொலிஸாரும் இணைந்துசோதனை நடவ

(08ஆம் பக்கம் பார்க்க)

## ...ளாத்திக்குளத்தில் படை ...கர்வு முறியடிப்பு

கிளிநொச்சி, செப். 01

...ன்னார் விளாத்திக்குளத்தில் இராணு ...ரின் முன்நகர்வு நடவடிக்கை ஒன்றை ...த் தாங்கள் முறியடித்துள்ளனர் என ...விடுதலைப்புலிகள் அறிவித்திருக் ...ர்.

...னாரின் கிழக்கு எல்லைப் பகுதியில் ...விளாத்திக்குளம் பகுதியில் நேற்று ...ிக்கிழமை காலை 8.30 மணிக்கு ...ரங்கி, ஷெல் தாக்குதல்களுடன் இரா ணுவத்தினர் பெருமெடுப்பிலான முன்நகர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## இராமர் அணையைத் தகர்ப்பதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை!

### அதற்குச் சேதம் ஏற்படுத்தாமல் சேதுசமுத்திரத்தை ஆழமாக்கலாம்

புதுடில்லி, செப். 1

இதிகாசப் பிரசித்தி பெற்ற இராமர் அணையைத் தகர்க்கக்கூடாது என்று இந்திய உயர் நீதிமன்றம் நேற்று - இரண்டு வாரங்களுக்கு- இம்மாதம் 14ஆம் திகதிவரை - இடைக் காலத் தடை உத்தரவு விதித்தது.

சேது சமுத்திரத்தை ஆழமாக்கி கப்பல் பாதையை உருவாக்கும் திட்டத்தின் போது இராமர் அணைக்கு (சேது பாலத்துக்கு) எவ்வித சேதமும் உண்டாக்காமல் பார்த்துக் கொள்வதாக மத்திய அரசு உறுதி அளிக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தனது இடைக் காலத் தீர்ப்பில் கூறியுள்ளது.

இராமர் அணையை வெடிபொருள்கள் கொண்டு அரசாங்கம் உடைக்கப்போவதாகக் குற்றஞ்சாட்டி, ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி உயர் நீதிமன்றில் தொடர்ந்த அவசர மனு மீதே நேற்று இடைக் கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நீதியரசர்கள் பி.என். அகர்வால் பி.பி. நயேலெகர் கொண்ட உயர் நீதிமன்றம் ஒரு மணிநேர விசாரணையின் பின் இந்த உத்தரவை விடுத்தது.

இராமர் அணையை உடைக்க எடுக்கும் முயற்சியை எதிர்த்து விஸ்வ இந்து பரி ஷத் கடந்த ஜூலை 26ஆம் திகதி ஆர்ப் பாட்டம் நடத்தியிருந்தும் குறிப்பிடத்தக்கது. (அ)

## சூட்டுக் காயங்களுடன் சிகிச்சை பெற்ற குடும்பஸ்தர் ஆஸ்பத்திரியிலிருந்து ஆணைக்குழு சென்று சரண்!

யாழ்ப்பாணம், செப். 1

அரியாலை நாவலர் வீதியில் இனந்தெரி...த ஆயுததாரிகளின் சூட்டுக்கு இலக்...ி, காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் ...ச்சை பெற்றவர் மனித உரிமைகள் ...ணைக்குழு யாழ். அலுவலகத்தில் சரண் ...டைந்தார்.

கடந்த 18ஆம் திகதி வீட்டில் இருந்த சம்பந்தப்பட்ட நபரை வெளியே அழைத்த இனந்தெரியாதவர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். காயமடைந்த நிலை யில் அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## உயிர் அச்சுறுத்தல் காரணமாக 2 மாதங்களில் 30 பேர் சரண்!

யாழ்ப்பாணம், செப். 1

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக கடந்த இரு மாதங்களில் 30 பேர் நீதிமன்றங்களில் சரண் அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களில் சரண் அடைந்த மொத்தம் 61 பேர் யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 30 பேர் கடந்த இருமாதங்களில் சரண் அடைந்தவர்கள் என்று நீதிமன்ற

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் மெடிகல் கிளினிக்
## CHUNNAKAM MEDICAL CLINIC

K.K.S வீதி, சுன்னாகத்தில் இயங்கிவரும் சுன்னாகம் மெடிகல் கிளினிக்கில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் தினமும் வைத்திய ஆலோசனை வழங்கப்படுகின்றது.மேலும் சில வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

* பொதுவைத்திய ஆலோசனை - MBBS DOCTOR
* மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனைகள் - MEDI QUICK (Pvt) Ltd.
* மருந்தகம் - PHARMACY
* ECG
* மருத்துவ சான்றிதழ்கள், மருத்துவ அறிக்கைகள்
* MEDICAL CERTIFICATE\ MEDICAL REPORTS
* பற்சிகிச்சை நிலையம் (DENTALCLINIC)

**யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணரினால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.**

(64359)

## ஆசிரியை உடன் தேவை

பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் வசிக்கும் மாணவிக்கு ஆறாம் (6) ஆண்டுக்கு (விஞ்ஞானம், சுகாதாரம், சுற்றாடல் உட்பட) வீட்டில் வந்து கற்பிக்கக் கூடிய ஆசிரியை உடன் தேவை.

தொடர்பு: 0777563703.

## கண்ணீர் அஞ்சலி



எமது பங்கின் முன்னாள் பங்குத் தந்தை

அருட்தந்தை

**பஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் பொனிபஸ்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பங்குத்தந்தையும் மக்களும்,
தேவாலட்டு திரு இருதய நாதர் ஆலயம், நவாலி.

(64393)

## சேவைநலன் பாராட்டு

### சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம்



(S.L.T.S.- I)

*(யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்)*

எமது பாட்சாலையில் 20 வருட கால சேவையின் பின்னர் தனது 57 ஆவது அகவையில் ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியர் தனது ஓய்வுக் காலத்திலும் சகல செல்வங்களும் பெற்று நீடுழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்.**

(64224)

## கண்ணீர் அஞ்சலி

யூரோவில் (Euroville) பொது முகாமையாளர்

**மா. இராமதாசனின்**

அன்புத் தந்தை

### சிதம்பரப்பிள்ளை மார்க்கண்டு

27.08.2007 காலமாகியதையிட்டு, அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்மாண உத்தரவாத நிதியம்**
Construction Guarantee fund (CGF).

(64410)


வடமராட்சியில் 10 வருட நுண்கலை, மனையியல் சேவையில் ....

**(தூரிகை நுண்கலை வளாகம்)**

(பதி. இல.: வ/கி - க/ பண் - 62/2000)

புதிய பிரிவு

**பயிற்சி நெறிகள்**

02.09.2007 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆரம்பம்

ஐசிங், *Hair Style, Make - up*, ஆடை வர்ணமிடல், சல்வார், சாறிவெக்ஸ், கம்பளி நூல் பின்னுதல், ஓவியக் கலை இன்னும் பல ஆக்கபூர்வமான பயிற்சிகள்

**ஓர்கன் இசைப்பயிற்சிக்கான புதிய பிரிவு ஆரம்பம்**

★ நிறுவனத்தில் புதிதாக இணைவோருக்கு சுயமாக சம்பாதிக்கக் கூடிய ''சிறு தொழில்'' பயிற்சி கட்டணமின்றி பயிற்றுவிக்கப்படும்.
★ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
★ அனுமதிகள் ஆரம்பமாகிவிட்டன.

**தூரிகை**

(சி-53515) ம.ம.வி. வீதி, நெல்லியடி.


## விழி நீர் சொரிகள்



புத்தூர் மேற்கு புத்தூரைச் சேர்ந்த

### செல்வன் வாசன் தீபறாஜ்

விழி நீர் சொரிய தவி வழி போனதெங்கே
யார் யார் வந்தாரோ ஏதேனும் சொன்னாரோ
அப்பாவோடிணைய ஆசையாய் போனீரோ
அம்மாவையும் வீட்டிடையில் அகாலமாய் போனீரோ
சின்னவயது தானுனக்கு சிந்தனையோ பெரியதடா
பதினொரு வயதுனக்கு பாவியர்கள் நாங்களடா
அம்மாவும் அப்பாவும் எப்படித்தான் தாங்குவாரோ
அங்காலை அப்பாவும் இங்காலை அம்மாவும்
அழுதிடவோ செய்தாய் ஆறுதலை யார் தருவார்
உன்னோடு நாம் வரவும் மனமேதும் இல்லையடா
ஆனாலும் உனை மறந்து வாழ்வதுதான் தொல்லையடா

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

உன் நினைவில்

**அப்பப்பா சற்குருநாதன் குடும்பத்தினர்.**

(64398)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சச்சிதானந்தம்

*(இளைப்பாறிய ஓவசியர்)*

சுதுமலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சச்சிதானந்தம் (30.08.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் ஆறுமுகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மங்களத்தின் அன்புக் கணவரும் உமாபதி (முகாமையாளர் இலங்கை தோல் உற்பத்தி நிறுவனம், கொழும்பு), காலஞ்சென்ற ரமணன் மற்றும் குமணன் (றேடியோ, ரி.வி. திருத்துநர், கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகௌரி (ஆசிரியை), யசோதா ஆகியோரின் மாமனாரும் டக்சன், துக்ஷாயினி, பவசாந்தன், அஞ்சனா ஆகியோரின் பேரனும் செல்வி பத்மாசினி ஆறுமுகம் (இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர்), காலஞ்சென்ற சதானந்தம்(பொறியியலாளர்) மற்றும் திரும்தி கமலாசனி சின்னத்துரை, திருமதி புஷ்பாசனி, சுந்தரமூர்த்தி (லண் டன்), சிவானந்தன் (கனடா), காலஞ்சென்ற சிறீ ஆனந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(02.09.07) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'திருப்பதி'*
*சுதுமலை கிழக்கு.* (64397)

தகவல்:
ச. குமணன், (மகன்).

### வேலுப்பிள்ளை மார்க்கண்டு



*(ஓய்வுபெற்ற கிராம சேவையாளரும், சமாதான நீதிவானும் கைதடி ஞான வைரவர் முன்னாள் தலைவரும்)*

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மார்க்கண்டு (26.08.2007) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களானவேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - பறுவதம் தம்பதியரின் மருமகனும் தில்லைப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் மகேஸ்வரன் (ஜேர்மனி), சபேஸ்வரன், சுதேஸ்வரன், ரவிஸ்வரன், மகிந்தினி (கனடா), சுகிந்தினி, ரவிந்தினி (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாதேவன், சண்முகதாஸ், சிவசுதன், சூரியகலா, நிகிலா, தமயந்தி, கார்த்திகா ஆகியோரின் மாமனாரும் நடராசா (ஜேர்மனி), நவரத்தினராசா, அரியராணி (ஜேர்மனி) தங்கராணி, நேசராணி ஆகியோரின் மாமனாரும் நவரத்தினராசா, விவேகானந்தன் (ஜேர்மனி), தனபாலசிங்கம் (சாவகச்சேரி பிரதேசசபை), கிஸ்ணானந்த தேவி, யசோதா ஆகியோரின் சிறிய தந்தையும் தம்பிமுத்து, கார்த்திகேசு (ஜே.பி. - புசல்லாவ), கதிர்காமசுவாமி(கொழும்பு), கனகமணி (கண்டி) ஆகியோரின் மைத்துனரும் தவநாதன் (ஜே.பி. - கண்டி) மனோகரி, திலகவதி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2007) சனிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

✱ *இன்றைய தினத்தில் அன்னாரின் சகோதரியின் இல்லமான த.தில்லைப்பிள்ளை, கைதடி தெற்கு, கைதடி என்னும் முகவரியில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.*

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி.* (64375)

தகவல்:
த.தில்லைப்பிள்ளை
குடும்பத்தினர்.

### திருமதி மேரி இமெல்டா சுவாம்பிள்ளை



*(சில்லாலை)*

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் ஹற்றனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி இமெல்டா சுவாம்பிள்ளை நேற்று (31.08.2007) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னா காலஞ்சென்ற சுவாம்பிள்ளையின் அன்பு மனைவியும்றாஜ்குமார், சுகுணகுமாரி, றுகுணகுமாரி, றமேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும் யசோ, பற்றிக் இம்மனுவேல், சுரேந்திரன், பிறிஜெற் ஆகியோரின் மாமியாரும் பிரதீபன், பிரசாந், தர்சன், லரோன், செரோன், சறுக்ஷன், சாறுக்கா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று(01.09.2007) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஹற்றன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு ஹற்றன் திருச் சிலுவை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உறறார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்:

*18 B, கும்புறுகிரிய வீதி,*
*ஹற்றன்.*
*தொ.பே. 0602517125.* (64400)

தகவல்:
றமேஸ்குமார்.
(மகன்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இரத்தினம்

ஆண்டொன்று ஓடியது.... உறவுகள் ஓடவில்லை....
மாண்டவர் மீண்டதில்லை...... மானிடர் நியதியது....
மீண்டிடும் நினைவுகள்........ மீட்டிடும் உணர்வுகள்....
வேண்டிடுவோம் இறைவனையே... உம் ஆத்மா சாந்தியுறவே...

*மயிலணி வடக்கு,*
*சுன்னாகம்.* (64364)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தியாகராசா

(முருகன் கிறேசர், வவுணத்தம்பை வீதி, குரும்பசிட்டி)

மயிலிட்டி தெற்கை பிறப்பிடமாகவும் தண்ணீர்த்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவரும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான சின்னத்தம்பி தியாகராசா கனடாவில் 29.08.2007 புதன் கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இளையபிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சிவசொரூபி (அண்ணை - கனடா), சுமதி (பிரான்ஸ்), கோமதி (ஜேர்மனி) மற்றும் கனடாவில் வசிக்கும் முருகதாஸ், கவிதாஸ், வளர்மதி, செல்வமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், தங்கராசா, துரைராசா மற்றும் இராசம்மா, செல்லம்மா, சண்முகராசா, பரஞ்சோதி, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கந்தையா, மார்க்கண்டு, அப்பாத்துரை, தங்கம்மா மற்றும் செல்லம்மா, கந்தசாமி, சிவமலர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2007) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கனடா தொலைபேசி இல.*
*0014163321947.*
*அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு.*

தகவல்:
[illegible]

## மரண அறிவித்தல்

### முத்துவேல் பத்மாவதி

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முத்துவேல் பத்மாவதி நேற்று (31.08.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேல் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகள் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2007) ஞாயிறுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''ஆனந்த வாசம்'',
இணுவில் மேற்கு, இணுவில். (64415)

தகவல்:
*க.சதானந்தன் (வவுா).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய சுகாதார சேவைப் பணிமனைகள் இன்று முதல் முன்மாதிரி அலுவலகங்களாகும்

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.மாவட்டத்தில் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையும் அதன் நிர்வாகத்தின் கீழ் உள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் இன்று தொடக்கம் முன் மாதிரி அலுவலகங்களாகச் செயற்படும்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த அலுவலகங்களில் நடைபெறும் செயற்பாடுகளைத் துரிதமாக்கவும் வினைத்திறன் உடையதாகவும் நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் கடமைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வழிகாட்டிக் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வழிகாட்டியின் பிரகாரம் குறிப்பிட்ட காலத்தில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாதுவிட்டால் பொதுமக்களோ, ஊழியர்களோ சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்களிடம் முறையிடமுடியும்

முன்மாதிரி அலுவலகங்களில் இவ்வழிகாட்டிகள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படவேண்டும்.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான சுகாதார சேவையை மேம்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதன்படி ஒவ்வொரு அலுவலகங்களும் எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும், மக்களுடன் உத்தியோகத்தர்களுடன் தொடர்புகள் எவ்வாறு பேணப்படவேண்டும் போன்ற விடயங்கள் -

மற்றும் தாய், சேய் நலப்பிரிவு, தாய் சேய் போசாக்குத் திட்டம், தொற்றுநோய் தடைப்பிரிவு போன்றன எவ்வாறு செயற்படவேண்டும் என்றும் -

குடும்பநல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் போன்ற பல்வேறு விடயங்கள் வழிகாட்டிக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. (203)

## பொதுச்சேவை ஆணைக்குழுவில் புதிய செயலாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.1

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்ட அதிகாரி சி.திருவாகரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சிலும் இறுதியாக வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளராக சேவையாற்றியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (203-95)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.1

நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ். லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நல்லூர் வடக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பொதுமருத்துவம், பெண் மருத்துவம் போன்றன பிரபல வைத்தியர்களால் பரிசோதனை செய்யப்பட்டுச் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் கண்பரிசோதனையும் நடத்தப்பட்டு கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. (203)

* * *

யாழ்ப்பாணம், செப்.1

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

சனசமூக நிலையத் தலைவர் கோ. தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபைச் செயலாளர் இ.இரத்தினசிங்கம் கலந்து கொள்வார். (203)

* * *

யாழ்ப்பாணம், செப்.1

நீர்வேலி சிவசக்தி முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சிவசக்தி சனசமூக நிலையத் தலைவர் பி.ஜெய்க்கொடி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் கலந்துகொள்வார். (203)

* * *

யாழ்ப்பாணம், செப்.1

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சிவபூமி அறக்கட்டளை நிதியம், வைத்தியசாலை அபிவிருத்தி சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் பல்துறைசார் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை சங்கானை சுற்றயல்கூறு வைத்தியசாலையில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் சத்திரசிகிச்சை, மருத்துவ, பெண்நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவவியல், புற்றுநோயியல், கண் நோயியல், சயரோகம் மற்றும் சரும நோயியல் சார் மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குவர். அத்துடன் இரத்த அழுத்த சோதனைகள் மற்றும் சிறுநீர், இரத்த சோதனைகளும் மேற்கொள்ளப்படும். (203)

* * *

யாழ்ப்பாணம், செப்.1

புத்தூர் கிழக்கு மகாத்மாஜி சனசமுக நிலைய மகாத்மாஜி முன்பள்ளி மழலைகளின் விளையாட்டுவிழா இன்று சனிக் கிழமை பி.ப.ஒரு மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது. சனசமுக நிலையத் தலைவர் கோ. குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இநநிகழவில் பிரதம விருந் தினராக சமூக அபிவிருத்திமன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் கலந்துகொள்வார். (203)




## காலாவதியான குளிர்பானங்கள் மல்லாகம் பிரதேசத்தில் அழிப்பு

யாழ்ப்பாணம்,செப்.1

மல்லாகம் பிரதேசத்தில் காலாவதியான குளிர்பானங்கள் சுகாதாரப் பிரிவினரால் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 800 போத்தல் நெல்லிரசம் மற்றும் சர்பத் என்பன அடங்கும்.

சுகாதாரப் பிரிவினர் அப்பகுதியில் திடீரென மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இது கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

அத்துடன் அனுமதி இன்றி குளிர்பானம் விற்பனை செய்தமை, காலாவதியான குளிர்பானத்தை விற்பனைக்காக வைத்திருந்தமை மற்றும் சுகாதாரத்திற்கு ஒவ்வாத வகையில் உற்பத்தி மேற்கொண்டமை போன்ற குற்றங்களுக்காக குறித்த நபருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (203)

## மக்களின் கஷ்டங்களை குறைக்கவே மத்தியஸ்தர் சபை அமைக்கப்பட்டுள்ளது

### பருத்தித்துறை நீதிபதி தெரிவிப்பு

கரவெட்டி,செப்.1

நீதிமன்றங்களுக்குச் செல்லும் மக்களின் கஷ்டங்களைக் குறைப்பதற்காகவே மத்தியஸ்தர் சபை அமைக்கப்பட்டுள்ளது. மத்தியஸ்தர்களின் சேவை மிக மிகப் பெறுமதி வாய்ந்தது.

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் தெரிவித்துள்ளார்.

கரவெட்டி தெற்கு மேற்கு மத்தியஸ்தர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நீதிஸ்தலங்களுக்குச் செல்லும் மக்களின் பளுச் சுமை, பணம், நேரம், தொழில் போன்றவற்றின் வீண் விரையங்களைக் குறைப்பதற்காகவே மத்தியஸ்தர் சபைகள் ஏற்படுத்தப்பட்டன.

நீதிமன்றங்களுக்கு வரும் எந்த வழக்கும் உடன் தீருவதில்லை. நாள்கள், வாரங்கள், வருடங்கள் கூட ஆகலாம்.

ஆனால், மத்தியஸ்தர் சபைக்கு மக்கள் தங்கள் பிரச்சினைகளை முறைப்பாடு செய்யும்போது மத்தியஸ்தர்களிடம் பிரச்சினைகளை நேரடியாகத் தெரிவித்துக் கொள்ளமுடியும்.

அத்துடன் அவர்களின் நியாயமான வேண்டுகோள்களையும் ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு, வழக்காளியும் எதிர்த்தரப்பினரும் புரிந்துணர்வுடன், நட்புறவுடன், சுமுகமான நடைமுறையுடன் பழகும் தன்மையை ஏற்படுத்தல் போன்ற சூழலை உருவாக்கமுடியும்.

அத்துடன் தம்மை நாடி வந்து தமது பிரச்சினைகளை முறையிடும் போது மத்தியஸ்தர்கள் இன,மத, உறவு முறைகள் பாராது நடந்துகொள்ளவேண்டும்.

ஒரு நண்பர் அல்லது உறவினர்கள் ஆகியோரின் விசாரணைகள் வரும்போது அது சம்பந்தமான மத்தியஸ்தர்கள் அந்த விசாரணையை வேறு ஒரு மத்தியஸ்தரிடம் ஒப்படைப்பது மேலும் சிறந்தது - என்றார். (203-70)



வடமராட்சி தெற்கு - மேற்கு மத்தியஸ்தர் தின விழாவில் வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் மங்கள விளக்கேற்றுவதையும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : சுந்தா)*

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிப்பு

வலி.வடக்கு,செப்.1

சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதியினால் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த காந்தரூபன் என்பவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது குறிப்பிட்ட நபர் 22 போத்தல் கசிப்புடன் பிடிபட்டனர்.

இவர் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதிபதி இவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்தார்.

உரிய தண்டப் பணத்தைக் கட்டத் தவறின் ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையை அவர் அனுபவிக்கவேண்டுமென வும் அறிவுறுத்தப்பட்டுள்ளார். (203-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுச்சுகாதார பரிசோதகருக்கு திங்கள் நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.பிராந்திய சுகாதார பயிற்சி நிலையத்தில் பயிற்சியை நிறைவு செய்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 26 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தில் வைத்து வழங்கப்படும்.

யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் வடமாகாணத்தைச் சேர்ந்த அடுத்த தொகுதி பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கான 18 மாத கால பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி எஸ்.குமாரவேற்பிள்ளை கலந்துகொள்ளவுள்ளார். (203)

## திணைக்கள உத்தியோகத்தருக்கு பதவி உயர்வுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.1

வடமாகாண தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வுப் பரீட்சை இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12ஆம் திகதி வரை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் சி.திருவாகரன் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதியட்டைகள் உரிய திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

திணைக்கள பதவி உயர்வு பரீட்சை நீண்டகாலமாக நடைபெறாமல் இருந்து தற்போது இடம்பெறவுள்ளது. (203-95)

## வலி.தென்மேற்கில் கச்சான் பயிர் திருட்டு

யாழ்ப்பாணம்,செப்.1

கட்டுடை, நவாலி, சங்குவேலி ஆகிய பகுதிகளில் கச்சான் பயிர்கள் இரவு வேளைகளில் திருடப்பட்டு வருகின்றன.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இவ்வருடம் கச்சாய் பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கு நல்ல அறுவடையை தரவுள்ள நிலையில் உள்ளது.

இந்நிலையில் கச்சான் பயிர்கள் திருடர்களால் திருடப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து வருகின்றனர். (203-95)

## கப்பல் பயணிகளால் தவறவிடப்பட்ட பொதிகள் மல்லாகம் நீதிமன்றில்

வலி.வடக்கு,செப்.1

கப்பல் பயணிகளால் தவறவிடப்பட்ட உணவுப்பொருள்கள் அடங்கிய பொதிகள் மற்றும் கைவிடப்பட்ட பயணிகள் பைகள் என்பன மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையில் இருந்து வந்த கப்பல் பயணிகளினால் கைவிடப்பட்ட பொருள்களையே தெல்லிப்பழை பொலீஸார் நீதிமன்றில் ஒப்படைத்துள்ளார்கள்.

இப்பொருள்களைத் தவறவிட்டவர்கள் உரிய அடையாளங்களை காட்டி மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (203-86)

## பரு. வைத்தியசாலையில் கர்ப்பவதிகளுக்கு பிரதி வியாழன் தோறும் சிகிச்சை

வடமராட்சி,செப்.1

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்று வைத்திய நிபுணர் இன்மையால் கர்ப்பவதிகளுக்கான சிகிச்சைக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் பிரதி வியாழக் கிழமை தோறும் கர்ப்பவதிகளுக்க்கான சிகிச்சைப் பிரிவு நடைபெறும் எனவும் -

இச்சிகிச்சைப் பிரிவுகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய நிபுணர் ஒருவர் சிகிச்சைகளை வழங்குவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-160)

## வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு
## (இலவச வெளியீடு) வெளியீட்டு விழா

நூலாசிரியர்: க.பேரம்பலம் (ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்)
காலம்: நாளை (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணி
தலைவர்: சி.இராஜநாயகம் (முன்னாள் சாவகச்சேரி வட்டாரக்கல்வி அதிகாரி)
பிரதம விருந்தினர்: வைத்தியகலாநிதி க.மாணிக்கம் (ஓய்வுபெற்ற மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர்)
சிறப்பு விருந்தினர்கள்: செ.ஸ்ரீநிவாசன் (தென்மராட்சிப் பிரதேச செயலர்), திருமதி அ.வேதநாயகம் (தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்)
வரவேற்புரை: டாக்டர் ஜெபநாமகணேசன்
ஆசியுரை: சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் (பிரதமகுரு, உசன் கந்தசுவாமிகோவில்)
வாழ்த்துரைகள்: த.வேலாயுதம் (சட்டத்தரணி), என்.சத்தியநாதன் (தென்மராட்சி கோட்டக்கல்வி அதிகாரி), ந.நவரத்தினராசா (அதிபர், உசன் இராமநாதன் ம.வி.)
தொடக்க உரை: பண்டிதர் அ.பஞ்சாட்சரம்

உசன் இராமநாதன் மகாவித்தியாலய மூத்த ஆசிரியரும், ஓய்வுபெற்ற அதிபருமான பண்டிதர் எஸ்.கே.தம்பு அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்.

நூல் வெளியீட்டுரை: பேராசிரியர் சி.சிவலிங்கராஜா
முதல் பிரதி பெறுபவர்: கு.விமலதாஸ் (உசன் கந்தசுவாமிகோவில், அறங்காவலர்)
நூல் ஆய்வுரை: செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
நன்றியுரை: கு.கமலதாஸ் (தலைவர் இந்து இளைஞர் மன்றம்).

(64358)

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நூல் வெளியீட்டு விழாக்குழுவினர்.

## கண்ணீர் அஞ்சலி

அருட்தந்தை P.M.இம்மனுவல் ✝ அருட்தந்தை B.F. பொனிபஸ்

நாம் ஆன்மீகத்தில் தழைத்துத் துளிர்விட நீங்கள் உரமானீர்கள். உங்கள் பணிகளையும் எம்மீது காட்டிய பரிவையும் நினைந்து கண்ணீர் சொரிகின் றோம். இவர்களின் இழப்பினால் துயருறும் உறவினர், நண்பர்கள் மற்றும் கத்தோலிக்க திருச்சபைக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். (64391)

சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலைக் குடும்பம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 ★ 05 ★ 1942



உதிர்வு 01 ★ 09 ★ 2005

### Dr. செல்லையா வேலாயுதபிள்ளை

எங்கள் குடும்பத்தின் தளபதியாய்
பல உள்ளங்களின் அதிபதியாய்
தொண்டாலும் பண்பாலும் குணத்தாலும்
போற்றப்பட்டவனாய்
போனால் போகட்டும் போடா என்ற அன்பான
வார்த்தையால்
உள்ளத்தில் குடியிருந்து ஆண்டுகள்
இரண்டு போனாலும்
உங்கள் நினைவுகள் மாறவில்லை.

உங்கள் ஆத்மா சாந்திபெற
பிரார்த்திக்கும்:-
சகோதரர்களும்
மைத்துனர்களும்.

பதிவாளர் வளவு,
சுழிபுரம்.
(64389)

## கண்ணீர்த் துயர் பகிர்கின்றோம்



### அருட்தந்தை B.F.பொணிபஸ் அடிகள்

★ நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும்,
தளராத விசுவாசமும் சோர்விலா இறைபணியும் - எங்கே?
★ பல்லாயிரம் மக்களை பல்லாயிரம் நோய்களிலிருந்து விடுவித்தீர்!
இவ் அற்ப நோயிலிருந்து உம்மை விடுவிக்க முடியவில்லையா?
★ நோயையும் பொருட்படுத்தாது இறைபணியே மேலானது என
இயலாத கரங்களை இறைவனை நோக்கி உயர்த்தி திருப்பலி
ஒப்புக்கொடுத்தீரே! கச்சாய் புனித சம்பேதுறுவானவர் ஆலயத்தில்!
★ சுகம் பெற்று வருகின்றேன் எனக் கூறிச் சென்றீர்
சுகமாக இருக்கின்றேன் என்று சொன்னீரே -
ஏன்திடீரென இந்தப் பயணம்? நினைக்கும் போது நெஞ்சு கலங்குது!
இறைஞ்சுகின்றோம் இறைவனை நித்திய வான்வீட்டில் நிம்மதியாக உறங்குவதற்கு!

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் தாய், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள், ஆயர், குருக்கள், கன்னியர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து நிற்பதோடு அத்துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

41/18, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.0776264650
(64390)

அன்பு குடும்பத்தினர் (மீசாலை),
குணதாசன் குடும்பத்தினர் (கச்சாய்)

## பாராட்டுகின்றோம்



'விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு. நித்திய ஜீவனைப் பற்றிக்கொள். அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்'
I தீமோத்தேயு:6:12

எமது திருச்சபைப் போதகரும் எமது சபையின் வேதாகம ஆசிரியரும் வலிகாம போதகர்கள் ஐக்கிய செயலாளருமாகிய

### அ.அருள்ராஜா அவர்கள்

கொழும்பு இறையியல் கல்லூரி யாழ்.நிலையத்தில் கல்விகற்று இறையியல் பட்டம் பெறுவதையிட்டு வாழ்த்துவதுடன் இன்னும் இறையுதவியுடன் இறை கல்வியில் மேம்பட்டு விளங்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தலைமைப்போதகர்,போதகர்கள்,
'அடைக்கல கூடாரசபை'
ஊழியர்கள்,-விசுவாசிகள் யாழ்ப்பாணம்.
(சி/53524)

நல்லூர் கந்தசுவாமி ஆலய
வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டும்
அதனைத் தொடர்ந்தும்

### ஸ்ரீலங்கா புத்தகசாலையின்

மாபெரும் புத்தகக் கண்காட்சியும்
விற்பனையும்

தரம் ஒன்று தொடக்கம் க.பொ.த.உ/த வரையான சகல பாடங்களுக்குமுரிய தமிழ், ஆங்கில, சிங்கள பாடநூல்கள், பயிற்சிப் புத்தகங்கள், செயல்நூல்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்குரிய பாடநூல்கள், இந்திய எழுத்தாளர்களின் அனைத்து வெளியீடுகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இடம்:- NO. 14, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி/53465)

## ENGLISH & SINHALA CLASSES

அடிப்படையிலிருந்து கிரமமான முறையிலமைந்த பாடங்கள் - பயிற்சிகள் / மொழிபெயர்ப்புப் பயிற்சிகள் மூலம் இரு மொழிகளிலும் சரளமாக வாசிக்க, பேச, எழுத கற்பிக்கப்படும். பாடசாலை விலகியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், O/L பரீட்சையில் ஆங்கிலத்தில் போதிய திறமை இல்லாமல் A/L செய்து கொண்டிருப்பவர்கள், A/L எடுத்துவிட்டு வெளிமாவட்ட பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் எதிர்பார்ப்புடன் உள்ளவர்கள் மற்றும் அரச/தனியார்துறை ஊழியர் உட்பட ஆர்வமுள்ள எவ்வயதினரும் சேரலாம்.

*ஒவ்வொருவருக்கும் தனிக்கவனம் மூலமே கற்பிக்கப்படும்.*
(தினசரி மு.ப. 8.45 முதல் 10.30 வரை/
பி.ப. 2.45 முதல் 5.30 வரை மாத்திரமே).

**T.SAGATHEVAN,**
B.A.London, tutor / translator (PVT)
46, பிறப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P.NO.2223520 (64321)

## கண்ணீர் அஞ்சலி



### அருட்தந்தை
### B.F.பொணிபஸ் அடிகள்

எமது பங்குத்தந்தை 27.08.2007 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். இந்தச் செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். இவரது ஆன்மா இறைவனின் அமைதியில் இளைப்பாற இறைவனை இறைஞ்சுவதுடன், நித்தியமும் சாந்திபெற எம் கண்ணீர்ப் பூக்களை அர்ப்பணிக்கின்றோம்.

பங்கு மக்கள்,
[illegible]
[illegible] (64361)

## Graduation & Service of Thanksgiving
## பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரியில்
செப்டெம்பர் 1, 2007 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு
கொழும்பு இறையியல் கல்லூரி
தனது முதலாவது
இறையியல் கல்விக்கான டிப்ளோமாவினை வழங்கும் நிகழ்வில் பட்டம் பெறும் ஊழியர்களை வாழ்த்துகின்றோம்.

கல்லூரிப் பேரவை,
கொழும்பு இறையியல் கல்லூரி
189, துட்டகைமுனு வீதி, கொகுவெல.

The Council, Principal & Faculty of
**Colombo Theological Seminary**
Takes pleasure in Greeting the Pastors and workers who are
**Graduating**
at Peto Memorial Hall, St John's College, Main Street, Jaffna
on Saturday, September 1, 2007 at 9.30 am

The Board of Governors
Colombo Theological Seminary
189, Dutugemunu Street, Kohuwela.
(64377)

## துயர் பகிர்கின்றோம்



அருட்பணி
### B.F.பொணிபஸ் அடிகள்

கடந்த 27.08.2007 அன்று எமது பங்குத்தந்தை அருட்பணி B.F. பொணிபஸ் அடிகள் இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு பெரும் அதிர்ச்சியும் துயரும் அடைந்துள்ளோம். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், குருக்கள், துறவியர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இவரது ஆன்மா இறைவனில் நித்திய சாந்தி பெற எம் கண்ணீர்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

(64395) பங்கு மக்கள், கிளாலி கண்மணி மாதா ஆலயம்.

## நன்றி நவிலல்



அமரர்
### சுப்பிரமணியம் இரத்தினம்
(பெரியம்மா)

யாழ். இல.736, கொழும்புத்துறை வீதி, பாண்டியந் தாழ்வை வசிப்பிடமாகக் கொண்டவரான எமது அன்புத் தெய்வம் அமரர் சுப்பிரமணியம் இரத்தினம் (பெரியம்மா) அவர்கள் 21.08.2007 அன்று சிவபதமடைந்த செய்திகேட்டு, நேரில்வந்தும், தொலைபேசி மூலமாக கனடா, லண்டன், அமெரிக்கா, ஜேர்மனி, நோர்வே, இந்தியா, சுவிஸ் போன்ற வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் இருந்து அனுதாபச் செய்திகளால் எம்மை ஆறுதல்படுத்திய அன்பு உள்ளங்களுக்கும், துண்டுபிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலிகளை நல்கியோருக்கும் மற்றும் இறுதிச் சடங்கு நிறைவேற அயராது ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உடன் பிறப்புகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

க.இரத்தினசிங்கம் (J.P)
குடும்பத்தினர்.
(64356)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 ★ 10 ★ 1952



இறப்பு 04 ★ 09 ★ 2004

### அமரர் அ.யோகானந்தா

B.Sc (Cey) Dip in Education (Sri Lanka). Assitant Director of Education - Maths - Thenmaradchi.

திதி-அபரபட்ச பஞ்சமி (01.09.2007)

ஆண்டு மூன்று உருண்டோடியதையா!
கண்டதெல்லாம் கனவாகிப் போனதையா!
பௌதிகவியல் மட்டுமல்ல, நல்லறிவும்
கொடுக்கும் ஆசான் அல்லவோ! நீரையா!
ஆர் உளர் உங்கள் பணி தொடர ஐயா!
அலைகள் ஓய்வதில்லை என்பீர்
'அலையை' நிகழ்த்துபவன் நான் என்பீர்
பாதி வழியில் அலையை நிறுத்தி விட்டு போனதேனோ?
பௌதிகம் இருக்கும் வரை உங்கள் நினைவலைகள்
இருக்குமையா

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி,மகன்மார்,
மருமகள், பேரன்,
பேர்த்திமார்.

71/1, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(64324)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில்

# சர்வதேசம் தொடர்ந்து பொறுமை காப்பது இங்கு ஒருபோதும் அமைதியைக் கொண்டுவராது

யாழ்ப்பாணம்,செப்.1

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக இனியும் சர்வதேசம் பொறுமை காப்பது ஒருபோதும் இங்கு அமைதியைக் கொண்டுவர உதவமாட்டாது.

இவ்வாறு யாழ்.மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டள்ளதாவது:-

மீண்டும் மீண்டும் சர்வதேசத்தை ஏமாற்றி சர்வகட்சிக் கூட்டங்களை நடத்தி அதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறிவரும் ஸ்ரீலங்கா அரசு உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு காண முயலவில்லை என்பதையும், அவர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகிறது என்பதையும் சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏற்கனவே தொடரும் தொடர்ச்சியான ஊரடங்குச் சட்டம் காரணமாக தமது வாழ் நாளின் அரைவாசியைத் தொலைத்த குடாநாட்டு மக்கள் மீது இராணுவப் பதிவுகள், பொலிஸ் பதிவுகள், துவிச்சக்கர வண்டிப் பதிவுகள், விசேட அடையாள அட்டைப் பதிவுகள் என்பன பாரிய உளத்தாக்கங்களை உண்டுபண்ணி வருகின்றன. ஒரு நேர உணவுக்குக்கூட கஷ்டப்படும் மக்கள் மீது மேலும் பொருளாதாரச் சுமைகள் திணிக்கப்படுகின்றன.

மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். தமது அன்றாடப் வாழ்நாளைக் கழிப்பதற்காகத் திணறிக்கொண்டிருக்கும் குடாநாட்டு மக்கள் மீதும், மாணவர்கள் மீதும் பாதுகாப்பு என்ற போர்வையில் திணிக்கப்படும் அழுத்தங்கள், கெடுபிடிகள், கொலைகள், காணாமற்போதல், கைதுகள் என்பன நிறுத்தப்பட உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (50)




பாதுகாப்புச் செய்தியாளர் அத்தாஸுக்கு எதிரான அச்சுறுத்தலை ஆட்சேபித்து ஊடகவியலாளர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

## பிரித்தானியத் தூதரகத்தை சென்னைக்கு மாற்றத் திட்டம்

கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதரகத்தை சென்னைக்கு மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவ் விடயம் தொடர்பாக மறு பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் அந்நடவடிக்கை பூர்த்தியான பின்பு இது தொடர்பான அறிவித்தலை தூதரகம் விடுக்கும் என்றும் தூதரகப் பேச்சாளர் ஜோன் குலி 'டெய்லி மிரர்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை - கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதரகத்தின் விசாப் பிரிவில் நாளாந்தம் அதிகளவான விண்ணப்பங்கள் கையாளப்படுகின்றன. இதன் காரணமாக விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்கு விசேட குழுவொன்றும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளது.

தூதரகத்தை மாற்றிய பின்னர் கொழும்பிலுள்ள விசா விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணிகள் தனியார் நிறுவனம் ஒன்றிடம் கையளிக்கப்படவுள்ளதகாவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.1

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணி மண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் 15ஆம் நாளான இன்று சனிக்கிழமை 'கந்தபுராண யுத்த காண்டத்தில் வரும் முருகனின் பெருமையும் பேரருள் சிறப்பும்' என்னும் தலைப்பில் சைவப் புலவர் கந்த சத்தியதாசன் சொற்பொழிவாற்றுவார்.

சில்லாலை முத்துமாரி அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

(203-79-111)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்

பாராய்யா வென்னைநீ பார்த்துக் கவலையெலாம்
தீராயோ செய்ய திருவேலா - வாராயோ
மாமயி லேறி மகிழ்ந்து வரந்தந்து
சேம முடன் காப்பாய் சிறப்பு

- யோகர் சுவாமிகள்

### நல்லூரான் நறுமலர் பாதம்நாடு!

நல்வாழ்வும் நற்பேறும் நல்லார் நன் னேசமும்
நல்லுடம்பும் நோய் நணு காமையும் - நல்லூரில்
நல்லொளி மேனிநம்பன் நறுமலர்ப் பாதங்கள்
நன்மலரால் நாடுவா ரெனின்

- சிவ. சண்முகவடிவேல்.

### எல்லாமே சிறக்க அருள்வாய்!

நல்லூரனை நம்பு வோமே
பொல்லாதன போக்குவானே
அல்லாதன அகன்று போமே
நல்லாகவே நடக்குமாமே
இல்லாதன அருள்வாய் குகனே
சொல்லாண்ட சுருதிப்பொருளே
பல்லாண்டு பாடிப் பணிவோம்!
எல்லாமே சிறக்க அருள்வாய்!

- மட்டுவில் க.சி.சதாசிவம்.



நல்லூர் கந்தசுவாமி கோயிலில்
இன்று பதினைந்தாம் திருவிழா
நாளும் எமது துயர் தீர்க்க முருகா நீயே என்றும் துணை.
விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:
திருமண விழாக்கள் மற்றும் விசேட வைபவங்களில்
இலகுவாகவும் நிறைவாகவும் அருந்திட
வெஸ்ரா நெல்லிக்கிரஸ்
வெஸ்ரா இண்டஸ்ரீஸ்
தொ.பே: 021 4591372 ஆனைக்கோட்டை.

# பாரம்பரிய விளையாட்டுக்களில் இருந்து விலகிச் சென்று கொண்டிருக்கும் போர்த்தேங்காய் உடைத்தல்

இலங்கைத் தமிழர்களின் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்றான போர்த்தேங்காய் உடைக்கும் விளையாட்டு இன்று அருகிச் சென்றுள்ளது. கடந்த காலத்தில் தமிழ் மக்களுடைய வீர விளையாட்டுக்களின் ஒன்றாக இந்தப் போர்த்தேங்காய் உடைத்தல் இருந்தது.

இன்றைக்கு சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் இந்த போர்த்தேங்காய் உடைத்தல் என்பது பரவலாக யாழ்.குடாநாட்டில் விளையாடப்பட்டது. இதற்கென தேங்காய்கள் தென்பகுதியில் இருந்தும் கூடக் கொண்டுவரப்பட்டன.

தமிழ் - சிங்கள புத்தாண்டு தினத்தன்று இந்த விளையாட்டு இடம்பெறும் தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் இந்தப் போட்டிகள் இடம்பெறுவதைப் பார்க்க ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் குடாநாட்டின் பல பகுதியில் இருந்தும் வருவார்கள்.

இதற்கு சிறந்த ஒரு போர்த்தேங்காய் உடைத்தல் போட்டியைக் குறிப்பிடமுடியும். இணுவில் மேற்கில் உள்ள பாலாவோடைப் பகுதியில் உள்ள தோட்ட வெளியில் ஒரு போர்த்தேங்காய் உடைத்தல் போட்டி இடம்பெறும். இதில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட தேங்காய்கள் கொண்டு இந்தப் போட்டி இடம்பெறும். இந்தத் தேங்காய்களில் ஒரு பகுதி தென்னிலங்கையில் உள்ள காலி, புத்தளம், சிலாபம் போன்ற பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்டவைகளாக இருக்கும்.

போட்டிகள் தமிழ் - சிங்கள புத்தாண்டு தினத்தன்று இடம்பெறுகின்ற போதிலும் இதற்கான நடவடிக்கைகள் இரண்டு மாதங்களுக்கு முன்னரே ஆரம்பமாகிவிடும். தென்னிலங்கையில் இருந்து சிறிய தேங்காய்கள் கொண்டுவரப்படுவதுடன், குடாநாட்டிலும் உரிய தேங்காய்களைத் தேடிப் பெறும் நடவடிக்கைகளும் ஆரம்பமாகிவிடும்.

இந்தத் தேங்காய்த் தெரிவில் போட்டியில் கலந்துகொள்பவரை விட அவருடைய ஆதரவாளர்கள் என்று கூறப்படுகின்ற பலர் அக்கறையெடுத்து கூர்மையான வடிவம் கொண்ட தேங்காய்களைத் தேடிப் பெறுவதில் ஈடுபடுவார்கள். அதற்குக் காரணம் சில இடங்களில் பணம் பந்தயமாக வைக்கப்பட்டு போட்டிகள் இடம்பெறும்.

இங்கு ஆயிரக்கணக்கான மக்கள் பார்வையாளர்களாகவும் தேங்காய் உடைப்பவர்களின் ஆதரவாளர்களாகவும் நிற்பார்கள்.

ஆயினும் இன்றைய நிலை போன்று போட்டியைக் குழப்பும் நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறா. இதற்கு போட்டியாளர்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

இதனை இங்கு குறிப்பிடவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக காணப்படுகின்றது. இந்தப் போர்த்தேங்காய் உடைத்தல் போட்டியில் அன்று ஈடுபட்டவர்கள் அதிக கல்வியறிவு கொண்டவர்களோ அல்லது பாடசாலை மட்டத்தில் சாதனை படைத்தவர்களும் அல்ல.

சாதாரணமான தொழில்களைச் செய்யும் நாளாந்த உழைப்பாளர்களே இந்த போட்டியில் ஈடுபட்டு வந்த போதிலும் விளையாட்டை விளையாட்டாக விளையாடி வெற்றி தோல்வியை விளையாட்டு வீரனுக்கு உரிய பண்புடன் ஏற்றுக்கொண்ட சிறந்த பண்பை அவர்களிடம் காண முடிந்தது. இன்று மைதானங்களில் விளையாடுவோரும் சரி போட்டியைக் கண்டு ரசிப்பவர்களும் சரி கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

போர்த்தேங்காய் உடைத்தல் போட்டியில் கலந்துகொள்பவர்களின் வீடுகளில் அன்று

## அதற்குப் புத்துயிர் ஊட்ட விளையாட்டுத்துறை முன்வருமா?

பெரும் கொண்டாட்டமாக இருக்கும். வீட்டிற்கு செல்லும் ரசிகர்கள், ஆதரவாளர்கள் தேநீர், சிற்றுண்டிகள் கொடுக்கப்பட்டு வரவேற்கப்படும் சம்பவங்களும் நடைபெறும்.

போர்த்தேங்காய் உடைக்கும் களத்தில் பார்வையாளர்கள் நான்கு புறமும் நின்று பார்வையிடக்கூடியதாக கயிறுகள் கட்டப்பட்டு மைதானம் (தோட்டங்கள், பொது வெளிகள்) சீராக ஒழுங்கு செய்யப்பட்டு யாரும் போட்டி இடம்பெறும். மைதானத்துக்கு செல்ல முடியாதவாறு அமைந்திருக்கும்.

போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் போட்டியாளர்கள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதற்கு ஏற்ப உரிய எண்ணிக்கையான தேங்காய்கள் மூடைகளில் இருந்து கொட்டி மத்தியஸ்தர் பார்வையாளர்கள் முன்னிலையில் எண்ணிக் காட்டுவார்கள். இரு போட்டியாளர்களிடமும் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை, தேங்காயின் உண்மைத் தன்மை என்பன பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும்.

பின்னர் தேங்காயை யார் முதலில் வைப்பது யார் உடைப்பது என்பது நாணயச் சுழற்சியின் மூலம் அல்லது இரு பகுதியினரும் விட்டுக்கொடுப்பின் அடிப்படையில் தீர்மானித்துப் போட்டி ஆரம்பமாகும்.

இந்த நேரத்தில் மைதானத்தில் போட்டியாளர்கள் அவர்களுக்கு கையாளாக இருந்து தேங்காயை எடுத்துக் கொடுப்பார்கள்(தலா ஒருவர்) மற்றும் மத்தியஸ்தர்கள்(இருவர்) ஆகியோர் மட்டும் காணப்படுவார்கள். இந்நிலையில் போட்டி ஆரம்பமாகும்.

நிலத்தில் வைக்கப்பட்ட தேங்காய் மற்றவரினால் உடைக்கப்படும் அல்லது உடைக்கப்படாது தறவி வழுக்கிச் செல்லும் சில சந்தர்ப்பங்களில் உடைக்கவென வைக்கப்பட்ட தேங்காய் உடையாது உடைக்கப் பயன்படுத்தப்பட்ட தேங்காய் உடைந்துவிடும்.

இந்நிலையில் தேங்காய் உடைக்க முயன்ற போட்டியாளர் புதிய தேங்காயை நிலத்தில் வைக்க ஏற்கனவே உடைக்கவென வைத்து உடைக்கப்படாத தேங்காயை மற்றப் போட்டியாளர் எடுத்து நிலத்தில் வைக்கப்பட்ட தேங்காயை உடைக்க முயல்வார்.

உடைக்கப்பயன்படுத்திய தேங்காய் உடையாமல் வைக்கப்பட்ட தேங்காய் உடைந்தால் அடுத்த போட்டியாளருக்கு உடைக்கப் பயன்படுத்திய தேங்காய் நிலத்தில் வைக்கப்படும். அப்போது நிலத்தில் முதலில் தேங்காய் வைத்தவர் புதிய தேங்காயைப் பெற்று உடைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவார்.

இவ்வாறு மாறிமாறி உடைப்பதும், வைப்பதும் என்ற நடவடிக்கை தெடர்ந்துகெண்டே இருக்கும். இடையில் சிறு சலசலப்புகளும் எழும். அதாவது குறிப்பிட்ட தேங்காய் உடைக்கப் பயன்படுத்தவும் உடைக்கப்படாமலும் இரண்டு, மூன்று தடவைகள் தப்பிக்கொண்டால் பார்வையாளர்கள், ரசிகர்களிடம் இந்த சலசலப்பு உண்டாகும்.

[illegible] உள்ள தென்னையில் இருந்து குறிப்பிட்ட தேங்காய் பெறப்பட்டது, எந்த தென்னை மரத்தைச் சேர்ந்தது என அறிவதற்கும், அடுத்த தடவை உரிய விவரங்கள் பெற்று ஏற்கனவே உரிய தென்னை மர உரிமையாளரிடம் சென்று மற்றப் பகுதியினருக்கு தேங்காய் கொடுக்க வேண்டாம். எங்களுக்கு வேண்டும் என்று கூறி அதனைப் பெறுவதற்கும் ஏற்படும் முன்முயற்சி காரணமாக எழும் சலசலப்பே அதுவாக இருக்கும்.

இதேபோன்று இன்னும் ஒரு சம்பவம் இடம்பெறும். தேங்காய் வைக்கப்பட்டு உடைக்கும் முயற்சியில் ஈடுபடும்போது ஏற்கனவே உடைக்கப்பட்ட தேங்காய்களில் இருந்து வெளியேறிய நீர் பறந்து அருகில் உள்ள தேங்காய்களிலும் படிந்து கொள்ளும்.

இத்துடன் தேங்காயை உடைப்பதன் மூலம் உடலில் இருந்து வெளியேறும் வியர்வையும் கூட கைகள் வழியாக வெளியேறும். அப்போது ஏற்கனவே வைக்கப்பட்டு உடைக்கப் பயன்படுத்திய தேங்காயும் வெடித்துள்ளபோதிலும் மீண்டும் பயன்படுத்துவதாக சந்தேகம் சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்டால் உடனடியாக எதிர்ப் போட்டியாளர் மத்தியஸ்தர் முன்னிலையில் குறிப்பிட்ட தேங்காயைப் பெற்று நன்கு பார்த்து அதன் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வார்.

### - விண்ணன் -

சந்தேகம் எழுந்தால் மத்தியஸ்தரிடம் கூறி அதனைச் சரிசெய்துகொண்டு மத்தியஸ்தரின் தீர்ப்புக்கு இரு போட்டியாளரும் கட்டுப்பட்டு போட்டியில் தொடர்ந்து ஈடுபடுவார்கள். எந்வொரு வாய்த்தர்க்கமோ அன்று விமர்சனங்களோ கூட இடம்பெறமாட்டாது. இதேபோன்று நிலத்தில் உடைக்க வைக்கப்படும் தேங்காயோ அன்றி உடைக்கப் பயன்படும் தேங்காயோ வழுகிச் சென்றால் உதவிக்கு நிற்பவர்களே அதனை சேகரிப்பார்களே அன்றி பார்வையாளர்கள், ஆதரவாளர்கள் அதனைத் தொடக் கூட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இன்றைய விளையாட்டுப் போட்டிகள் போன்று அடிதடி, சண்டை சச்சரவு எதுவும் அங்கு ஏற்படாது.

விதிவிலக்காக அப்படி ஏதும் ஏற்பட்டால் அது உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப் படும். அவ்வாறு ஈடுபட்டவர்கள் யாருடைய ஆதரவாளர்கள் உடனே அந்தப் போட்டியாள ரினால் அவர் கட்டுப்படுத்தப்படுவார். இதன் காரணமாக போட்டி போட்டியாக இருக்கு மேயன்றி போட்டிகள் குழப்பமாக இருக்கமாட்டாது.

போட்டியாளர்களும் கூட மத்தியஸ்தத்திற்கு கட்டுப்பட்டே விளையாடுவார்கள். அடுத்தவர்கள் பார்த்துச் சிரிக்கும் நிலைக்குச் செல்லமாட்டார்கள்.

இவ்வாறனதொரு தமிழர்களின் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் விளையாட்டு இன்று அருகிச் சென்று கொண்டிருக்கின்றது.

எனவே அதனைப் பாதுகாத்துப் புத்துயிர் ஊட்டவேண்டிய தேவை விளையாட்டுத் துறை சார்ந்தோருக்கு ஏற்பட்டுள்ளது. அதனை அவர்கள் விரைவில் செய்யவேண்டும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



27.08.2007 அன்று காலமான
எமது முன்னாள் பங்குத்தந்தை
**அருட்திரு B.F.பொணிபஸ்**
அடிகளின் ஆன்ம இளைப்
பாற்றிக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பங்குத்தந்தையும் பங்குமக்களும்**
**புனித நிற்றாள் கோயில்,**
**இளவாலை.** (64368)

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA
### VAVUNIYA CAMPUS

University of Jaffna will entertains applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF APPLIED SCIENCE**

Senior Professor/Professor in Computer Science or Information and Communication Technology.

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Computer Science or Information and Communication Technology.

| Post | Salary Scale |
|---|---|
| Senior Professor | Rs.57,755 - 11x900 - 67,655 /-p.m |
| Professor | Rs.50,905 - 13x850 - 61,955 /-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.42,650 - 7x800 - 48,250 /-p.m |
| Senior Lecturer Gr.II | Rs.37,650 - 11x700 - 45,350 /-p.m |
| Lecturer (Probationary) | Rs.26,900 - 10x585 - 32,750 /-p.m |

**Note**: In addition to the above salary, the following allowances will also be paid:
i. An academic allowance equivalent to 25% of the basic salary.
ij. Cost of living allowance Rs.2,125/-p.m.

**Statutory benefits:**
i. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
iii. Gratuity payments
iv. Emloyees' Trust Fund benefits
v. Free Medical Services.

**Closing Date:**
Post of Senior Professor / Professor - 16.11.2007
Other posts - 12.10.2007

Application and other documents for the Post of Senior Professor / Professor shall be sent to the Vice - Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar Establishment.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for **more than one** post should make **separate applications.**

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR,**
**UNIVERSITY OF JAFFNA, SRILANKA.**
**30 August 2007** (C/53519)

## ஆசிரியர்களுக்கான உளவளக்கற்கைநெறி

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகமும் சுகவாழ்வு நிறுவனமும் இணைந்து நடத்தும் ஆசிரியர்களுக்கான உளவளத்துணைக் கற்கை நெறி தொடர்பான விவரம் வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிக்கு ஆர்வமுள்ள ஆசிரியர்களை விண்ணப்பிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (203)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில மற்றும் இலக்கணம். By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி Diplcer in English and Science (English medium London) 426(302),K.K.S.வீதி, யாழ்ப்பாணம்; பிளாக் வீதி, சங்கானை. (64357)

**MICRO COMPUTER ACADEMY**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
No:328,365 Ariyakulam Junction
Stanley Road, Jaffna, Srilanka.

அனைத்துக் கணினிக் கற்கை நெறிகளும் ஆரம்பம்.
விரையுங்கள்!
பிரிவு I - 01.09.07
பிரிவு II - 05.09.07
☎:021 222 7866

**Jaffna College Undergraduate Dept**
464, Hospital Road,
Jaffna.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
**External Degree**
GAQ, BA (I), BA (final), 1st in com, BCom (I &II &III)

வங்கியில் வேலைவாய்ப்பை பெறுவதற்கான
வங்கியியல் கற்கைநெறிகள்
**DBF & CBF**
பதிய வேண்டிய திகதி - 10-09-2007

AAT I, II & III வகுப்புக்கள் நடைபெறுகின்றது
2007 June பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பெறுபேற்றினை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்

Ceylon Medical College Council
External Pharmacist Examination
வகுப்புக்கள் நடைபெறுகின்றன

SINHALA CLASSESS
Spoken Sinhala & GCE O/L
(Wed & Fri 9 - 12)
**Director**

## கண்ணீர் அஞ்சலி



அமரர் வேலுப்பிள்ளை மார்க்கண்டு (J.P)

*(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)*

கைதடி தெற்கைப்பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை மார்க்கண்டு 26-08-2007 லண்டனில் காலமான செய்தி அறிந்து மிகவும் வேதனை அடைகின்றோம். அன்னார் கைதடி தாக்கடியான் புலம் ஞானவைரவர் ஆலய தலைவராகவும் மற்றும் சமய, சமூக தொண்டராகவும் பணியாற்றியுள்ளார். இவரது இழப்பால் வேதனையுறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்திபெற ஞானவைரவ சுவாமியாரை பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பூசகர், பரிபாலன சபையினர்,**
**தாக்கடியான் புலம் வைரவர் ஆலயம்.** (64370)

**உடன் விற்பனைக்குண்டு**

புத்தம் புதிய NP JZ XXXX தொடர் இலக்கத்தைக்கொண்ட ஒட்டோ மற்றும் NP HX. XXXX தொடர் இலக்கத்தைக் கொண்ட பஜாஜ் கலிபர் 115, மோட்டார் சைக்கிளும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: துரையப்பா சண்முகம், மிருசுவில் வடக்கு, மிருசுவில் (கொட்டிகை அம்மன் கோயிலுக்கு பின்புறமாக) தொ.பே.0779225603 (64238)

**புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!**

**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

| Jaffna Head office | Branch office |
|---|---|
| No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422 | No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna. |

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 03/09/2007 09.00 AM

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 11 - 10 - 1983 |  | 10 - 09 - 2006 |

**பாலசுந்தரம் அலிஸ்ரன் ராஜ்குமார்**

*(அலெக்ஸ் பேக்கரி உரிமையாளர்)*
*திதி: சதுர்த்தி*

அம்மா என உன் குரல் கேட்டு
அலிஸ்ரன் என்றழைக்க முடியாமல்
ஆண்டொன்று ஆனதடா இன்று!
திரும்பி வருவேன் எனக்கூறி
திரும்பி வராமல் போனதேனடா!
தேடி அலைந்தேன் நாள் முழுதும் - மறுநாள்
கண்டேன் உன்உடலை தெருவோரமாக
கழுகிற்கிட்ட இரைபோல் எறிந்தார்கள் - உன்உடலை
கதறி அழுதேன் நீ வருவாயென - ஆனால்
நீ உருத்தெரியாமல் சிதைந்து மௌனமானதேன்
நீ தான் என அறிய நான் துடிக்க
நீ வைத்திருந்ததாயத்து அடையாளங் காட்டியதேனடா
உன்னை சுமந்த கருவறை - இன்று
உருத்தெரியா இருட்டறை ஆனதடா!
உன் விதி எழுதிய இறைவனுக்கு - நீ
விழித்திருக்க விருப்பமில்லாமல் போனதேனோ?

*ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.* (64317) வினிபிறெட் *(தாய்)*, சகோதரங்கள்.

## கண்ணீர் அஞ்சலி



"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

கடந்த இரண்டு வருடமாக எமது ஆலயத்தில் இறைபணியாற்றித் தமது அன்பினாலும் ஆன்மீக வழிகாட்டலாலும் பங்கு மக்களைத் தன்னோடு இணைத்து எமக்கு நல்வழிகாட்டிய எமது ஆலய பங்குத்தந்தை

அருட்பணி **பஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் பொணிபஸ்**

அடிகளார் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

அருட்தந்தையின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தாருக்கும், யாழ்.ஆயர், சக அருட்தந்தையர்க்கும், யாழ்.திருச்சபைக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மு.கு:- *03-09-2007 அன்று காலை 9.15 மணிக்கு இராயப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெறும்.*

*கச்சாய் வீதி, கொடிகாமம்.* (64362) **பங்கு மக்கள், புனித இராயப்பர் ஆலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொ... 222 993 தொலைநகல்.: 222 9944

# கோ... தொடரும் அரசின் சர்வதேசக் கையாள்கை

சர்வதேச சமூகத்தைக் கையாள்வதில் மோசமான இராஜ தந்திரத் தவறுகளை இழைப்பதன் மூலம் கொழும்பு அரசு தனது தலையில் தானே மண் அள்ளிக் கொட்டி வருகிறது என்பதைப் பல தடவைகள் இப்பத்தியில் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். அதுவே தொடர்கதையாகத் தொடர்கின்றது.

இப்போது, அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றிருக்கும் கலாநிதி ரஜீவ் விஜேசிங்க 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி' போல தேவையில்லாத விவகாரத்தைக் கிளறிக் குழப்பி அடித்திருக்கின்றார்.

அவர் இப்பொறுப்பை ஏற்று சில மாதங்களே ஆகின்றன. அதற்கிடையில் மேற்குலகுக்கு - குறிப்பாக மேற்குலக மனித உரிமைகள் அமைப்புகளுக்கு - எதிராக ஓர் அறிக்கைப் போரைத் தொடங்கி ஆலாபரணம் பண்ணி வருகின்றார்.

மூதூரில், பட்டினிக்கு எதிரான பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தின் ஊழியர்கள் 17 பேரின் படுகொலை தொடர்பாக அதிக சிரத்தை காட்டிவரும் சர்வதேச சமூகம், அந்தப் படுகொலைச் சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும் என வலியுறுத்திக் கொண்டிருக்க, அதை விடுத்து, அந்தப் பணியாளர்கள் படுகொலைக்கு அந்தத் தொண்டு நிறுவனமும் காரணம் என்று புதுக்கதை ஒன்றை அவிழ்த்துவிட்டு தம்மைத் தாமே கோமாளியாக்கிக் கொண்டார் அவர்.

இப்போது, இந்தியாவில் போய் இருந்துகொண்டு மற்றொரு கதையை அவிழ்த்து விட்டிருக்கின்றார். அதுவும், இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிமனையின் பணிப்பாளர் என்ற தோரணையில் தாம் கருத்துக் கூறுகின்றோம் என்பதை மறந்து அவர் பேசுகிறாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் விதத்தில் அக்கருத்து வெளிப்பட்டிருக்கின்றது.

*"இலங்கையில் ஆட்சியை மாற்றுவதற்குப் பிரித்தானிய அரசு எதிர்பார்க்கின்றது. தனக்கு விருப்பமான ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்துவதை நோக்கமாகக் கொண்டே தனது நடவடிக்கைகளைப் பிரித்தானியா முன்னெடுக்கின்றது.*

*"ஒரு கட்டத்தில் அனுசரணைத் தரப்பில் இருந்து நோர்வேயை ஓரங்கட்டிவிட்டு அந்த இடத்தைத் தான் பிடிப்பதற்கும் பிரிட்டன் விரும்பியது"* - என்றெல்லாம் அவர் கருத்துக் கூறியிருக்கின்றார்.

பிரிட்டனின் பிரதமராக ரொனி பிளேயர் இருந்த சமயம், இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அமைதித் தீர்வைக் காணும் விடயத்தில் பிரிட்டனையும் சம்பந்தப்படுத்த விரும்பி, நேரடியாக பிரிட்டனுக்குச் சென்று, அந்நாட்டுப் பிரதமரின் விடுமுறைக்கால பங்களாவில் பிரதமர் பிளேயருடன் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகப் பேச்சுகளை நடத்தி, முன்முயற்சிகளை எடுத்தார் என்பது இலங்கை அரசின் சமாதானச் செயலகத்தின் புதிய பணிப்பாளருக்குத் தெரியாது போலும்.

உள்நாட்டில் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் அழுத்தத்துக்கு அடிபணிந்த இந்த அரசுத் தலைமை, அதன் காரணமாக - அந்த மேலாண்மைப் போக்காளர்களைச் சமாளித்துத் திருப்திப்படுத்துவதற்காக - நோர்வேயை அனுசரணைப் பணியிலிருந்து அகற்ற எத்தனித்தமையும் -

நோர்வேக்கு மாற்றுத் தரப்பாக பிரிட்டன் உட்பட பல நாடுகளில் ஏதேனும் ஒன்றை இதற்குள் இழுத்து விழுத்த அது முயன்றமையும் - இராஜ தந்திர வட்டாரங்களில் நன்கு தெரிந்த விடயங்கள்.

அவற்றை மறந்து, புதுப் புரளி அவிழ்த்துவிடும் கலாநிதி விஜேசிங்கவுக்கு பிரிட்டன் உரிய பதிலடி தந்திருக்கின்றது.

*"இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தலையிடும் எண்ணம் பிரிட்டனுக்குக் கிஞ்சித்தும் கிடையாது. இலங்கையில் உள்நாட்டுக் கட்சி அரசியலில் சம்பந்தப்பட நாம் விரும்பமாட்டோம். நோர்வேயின் இடத்துக்கு பிரிட்டன் அனுசரணைத் தரப்பாக வருவது என்ற எண்ணம் எந்தச் சந்தர்ப்பத்திலும் எமக்கு இருந்ததில்லை."* - என்று பிரிட்டன் உத்தியோகபூர்வமாகவும் திட்டவட்டமாகவும் தெரிவித்து விட்டது.

ஐ. நாவின் உயரதிகாரியைப் பார்த்து அரசின் மூத்த அமைச்சரும், நாடாளுமன்ற பிரதம கொறடாவுமான ஜெயராஜ் பெர்னாண்டோப் புள்ளே 'பயங்கரவாதி' என்கிறார். அது குறித்து அரசுத் தலைமை கவலை கூடத் தெரிவிக்காமல் மௌனம் காத்து அந்தக் கருத்தை அதன்மூலம் அங்கீகரிக்கின்றது.

இப்போது என்னவென்றால் நாட்டின் ஆளும் தரப்பை மாற்றி, எதிர்க்கட்சித் தரப்பை ஆட்சியில் அமர்த்த பிரிட்டன் முயல்கிறது என அரசின் ஒரு முக்கிய அதிகாரி இந்தியாவில் போய் இருந்துகொண்டு கூறுகின்றார்.

சர்வதேசத்தை கொழும்பு கையாளும் முறைமை பற்றிய சில உதாரணங்கள் மட்டுமே இவை.

இந்த அரசின் மூத்த அமைச்சராகவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சிப் பீடத்துக்கு - அதிகாரத்துக்கு - ஏற்றுவதற்கு முன்னின்று உழைத்தவருமான மங்கள சமரவீர, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பிலிருந்து வெளியேற முன்னர் தமது அதிருப்திகளைக் குறிப்பிட்டு, அரசுத் தலைவருக்கு விரிவான கடிதங்களை அனுப்பி வைத்திருந்தார். அவற்றில் சர்வதேச சமூகத்தைக் கையாளும் விடயத்தை கொழும்பு நிர்வாகம் ஒரு பொழுதுபோக்கு விடயம்போல - கோமாளித்தனமாக - கையாள்கின்றது எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

அது திரும்பத் திரும்ப உறுதியாகி வருகின்றது. அதன் ஓர் அங்கம்தான் அரச சமாதானச் செயலகப் பணிப்பாளரின் தற்போதைய கருத்தும் கூட.

நாட்டில் ஆட்சியில் இருக்கும் அரசை - அதுவும் நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அரசை - வீட்டுக்கு அனுப்பி, எதிர்க்கட்சித் தரப்பை ஆட்சியில் அமர்த்துவதற்கு பிரிட்டன் போன்ற மேற்குலக நாடு முயல்கின்றது என்று குற்றம் சுமத்துவது ஒரு சின்ன விவகாரம் அல்ல. அதுவும் அரசின் மூத்த அதிகாரி ஒருவர் அதைக் குறிப்பிடுவது மிக முக்கிய அம்சமாகும். அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே போன்ற - உள்நாட்டில் வாக்காளர்களைச் சமாளிக்கவும், தமது ஆதரவு மற்றும் செல்வாக்கைப் பெருக்கவும், வாயில் வந்தபடி கருத்து வெளியிடும் ஒரு சராசரி அரசியல்வாதியின் - கூற்று அல்ல இது. அரசில் பொறுப்புவாய்ந்த பதவியில் இருக்கும் ஓர் அதிகாரி வெளியிட்ட கருத்து இது. அதுவும், அரசின் சார்பில் சர்வதேச தொடர்பாடல்களை மேற்கொள்ளும் அதிகாரத்தில் இருக்கின்ற - இராஜதந்திரத் தகுதியுடைய - ஓர் அதிகாரியின் கூற்று இது.

அதை வெறுமனே கடந்து செல்லும் குறிப்பாகக் (Passing Comment) கருதி ஒதுக்கி விட முடியாது. சர்வதேச சமூகம் அப்படி ஒதுக்கிவிடாது என்பதும் கவனிக்கத்தக்கது.

# ஆசிரியரின் சம்பளப் பிரச்சினை: ஆராய அமைச்சரவை உபகுழு

கொழும்பு, செப். 01

தமது சம்பளப் பிரச்சினை மற்றும் சம்பள முரண்பாடு தொடர்பான விடயங்களை முன்வைத்து தற்போது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியை ஆசிரியர்கள் பகிஷ்கரித்து வரும் நிலையில் அவர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக ஆராய அமைச்சரவையால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் சுசில் பிரேம ஜயந்த, ஜோன் செனிவிரட்ன மற்றும் கருஜெயசூரிய ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெறுகின்றனர்.

இந்தக் குழு மிக விரைவில் தனது யோசனையை முன்வைக்கும் என்று அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்று தெரிவித்தார்.

அரசதகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு தகவல் வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஆசிரியர்கள் சம்பளப் பிரச்சினையை முன்வைத்து - அதைத் தீர்க்கக் கோரி - விடைத்தாள் திருத்தும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இப்பிரச்சினையை விரிவாக - விரைவாக - ஆராய்ந்து அதை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அமைச்சரவை உப குழுவொன்றை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு முதலாம் வகுப்பிற்கு மாணவர்களைச் சேர்ப்பது தொடர்பான விடயமும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் அதிககாலம் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவது தொடர்பான தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது - என்றார். (சி)

# வர்த்தகர் கடைக்குப் புறப்பட்ட வேளை அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், செப். 1

சரசாலை தெற்கில் நேற்று காலை ஏழு மணியளவில் புடைவைக் கடை உரிமையாளர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மயூரன் என அழைக்கப்படும் நடராஜலிங்கம் கேமலன் (வயது - 28) என்ற குடும்பஸ்தரே சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார்.

இவர் சாவகச்சேரியில் உள்ள தனது புடைவைக் கடைக்குச் செல்வதற்கு வீட்டில் ஆயத்தமாக நின்றவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் அவரை வெளியில் அழைத்துச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றதாக விசாரணைகளில் கூறப்பட்டது.

மரண விசாரணைகளை சாவகச்சேரி பதில் நீதிவான் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

(1-202-78-207)

# இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த பிரித்தானிய அரசு முயற்சி செய்கின்றது

## சமாதான செயலகப் பிரதிநிதி கூறுகிறார்



'இலங்கையில் ஆட்சியை மாற்றுவதற்குப் பிரித்தானிய அரசு எதிர்பார்க்கின்றது. தமக்கு விருப்பமான ஐ.தே.க.வை ஆட்சியில் அமர்த்துவதை தனது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

- இவ்வாறு இலங்கை அரசின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ரஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

'இந்து ஆசியன்' செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அமெரிக்கா இலங்கை விடயத்தில் கரிசனை காட்டுகின்ற அதேநேரம், இந்தியா இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேலதிக முனைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். பிரித்தானியா இலங்கையின் பாதுகாப்புச் செயலரை அலட்சியப்படுத்தும் வகையில் செயற்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பதவியிலிருந்து விலக்குவதற்கும் பிரித்தானியா விரும்புகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்கில் இராணுவப் பின்னடைவால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் அமெரிக்கா, நோர்வே, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றினைவிட இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா உரிய முனைப்புடன் செயற்பட வேண்டும். அத்துடன் இந்தியாவின் ஆலோசனைப் படியே இலங்கை செயற்பட வேண்டும் என்ற இலங்கை அரசு உணர்ந்துள்ளது என்றார். (சி)

# சிவராமலிங்கம்பிள்ளை நினைவுதின நூல் வெளியீடு நாளை வேதாந்த மடத்தில்

யாழ்ப்பாணம், செப். 1

பேராசான் இலக்கிய கலாநிதி க. சிவராமலிங்கம்பிள்ளையின் இரண்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு, அவரது ஆக்கங்களின் தொகுப்பான "இந்துப் பண்பாட்டியல்" என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை நடைபெறவுள்ளது.

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாதகுரு பீடத்தில் நாளை மு.ப. 10 மணிக்கு வெளியீட்டு விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும். பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெறும் விழாவில் வேதாந்தமட குரு பீடாதிபதி ஸ்ரீ வேத வித்தியாசாகர சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். தேவார,இசைமணி கலாபூஷணம் இரா. திருஞானசம்பந்தன் குழுவினரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இடம்பெறும். யாழ். பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன் கருத்துரை வழங்குவார். (அ)

# ஐ.தே.கவிலிருந்து அரசுப் பக்கம் தாவியோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இடைக்காலத் தடை

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று விதித்தது

கொழும்பு, செப். 1

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசுப் பக்கம் தாவி அமைச்சர்களாகி விட்ட ஐவருக்கு எதிராக அக்கட்சி நடவடிக்கை எடுப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இரண்டுவார காலம் இடைக்காலத் தடை விதித்தது.

அமைச்சர்கள் ஜி. எல். பீரிஸ், கரு ஜெயசூரிய, தர்மதாஸ பண்டா, மனோ விஜேரத்ன,காமினி லொக்குகே ஆகியோர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்த கொழும்பு மாவட்ட நீதிபதி சிசிர ரத்னாயக்கா இந்தத் தடை உத்தரவை வழங்கினார்.

மேற்படி குழுவினர் ஐ. தே. கட்சியிலிருந்து, கட்சியின் அனுமதியின்றி வெளியேறி 'ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயக முன்னணி' என்ற அமைப்பைத் தோற்றுவித்தமை தொடர்பாக அவர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டும்படி, அந்தக் குழுவினருக்கு கடந்த ஜூலை 13 ஆம் திகதி எழுதிய கடிதத்தில் ஐ.தே.கட்சிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா கேட்டிருந்தார்.

அந்தக் கடிதத்தின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு எதிராகவும் -

ஐ. தே. கட்சியின் பொதுச் செயலாளராக திஸ்ஸ அத்தநாயக்கா செயற்படுவதற்கு எதிராகவும் -

இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு மேற்படி ஐவரும் தமது மனுக்களில் கோரியிருந்தனர்.

### செயலாளரை விலக்கும் கோரிக்கை நிராகரிப்பு

இந்த மனுக்களைப் பரிசீலித்த நீதிபதி, திஸ்ஸ அத்தநாயக்கா ஐ.தே.க. பொதுச் செயலாளராகச் செயற்படுவதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கும் கோரிக்கையை நிராகரித்தார்.

எனினும் மேற்படி ஐவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரணங்களைக் காட்டும்படி கோரும் கடிதத்தின் மீது ஐ. தே. கட்சி தொடர் நடவடிக்கைகளை எடுப்பதை இரண்டு வாரங்களுக்குத் தடை செய்யும் இடைக்கால உத்தரவு ஒன்றை அவர் வழங்கினார்.

வழக்கு செப்டெம்பர் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (சி)

# பொது நிர்வாக டிப்ளோமா பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் 2004 - 2005 கல்வியாண்டின் பொது நிர்வாக பட்டப் பின் டிப்ளோமா பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாணவர்கள் தங்கள் பரீட்சைப் பெறுபேறுகளை உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று பீடாதிபதி பேராசிரியர் க. கந்தசாமி தெரிவித்தார்.

இதேவேளை-

மேற்படி பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கான மீள் பரீட்சை இம்மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது எனவும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை பீட அலுவலகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

2005 ஒக்ரோபர் மாதத்திற்குப் பின்னர் வெளியான இறுதிப் பரீட்சை ... றை இதுவரை பெற்றுக் ... வர்கள் உடனடியாக பட்டப் பின் படிப்புகள் பீட அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளார்.(1-202)

# ஒவ்வொருவருக்கும் 3 கிலோ வீதம் கோதுமை மா நாளை முதல் விநியோகம்

குடாநாட்டில் உள்ள ப.நோ.கூ. சங்க கிளைகள் ஊடாக நாளை தொடக்கம் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் மூன்று கிலோ வீதம் கோதுமை மா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ப.நோ.கூ. சங்கங்கள் யாழ். செயலகத்தில் வழங்கற் கட்டளைகளை இன்று பெற்றுகளஞ்சியத்தில் கோதுமை மாவை சேகரித்து மக்களுக்கு நாளை தொடக்கம் விநியோகிக்க வேண்டும் என்று திட்டப் பணிப்பாளர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 16 | ஞாயிறுக்கிழமை 02.09.2007 |
| திதி : பஞ்சமி | காலை 06.17 |
| நட்சத்திரம் : பரணி | பி.இ. 02.08 |
| சுபநேரம் | : 09.05 - 10.35 |
| ராகுகாலம் | : 04.35 - 06.05 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளாத்திக் குளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு எதிராக விடுதலைப் புலிகள் முறியடிப்புத் தாக்குதல்களை நடத்தினர். இராணுவத்தினரின் முன்நகர்வு நடவடிக்கை பிற்பகலில் முறியடிக்கப்பட்டது.

இதில் இராணுவத்தினருக்கு சேதங்கள் மற்றும் இழப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரின் சடலமும் ஆயுதத் தளபாடங்களும்விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின் றன. விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார் - இப்படிப் புலிகள் மேலும் தெரிவித்திருக் கின்றார்கள்.(சி)

## காஸ் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வது முறையாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் 'லாவ் காஸ்' நிறுவனத்தினர் தமது தயாரிப்பின் விலைகளை அதிகரிப்பதற்கான அனுமதியை நுகர்வோர் விவகார அதிகார சபையிடமிருந்து எதிர்பார்க்கின்றனர் என அறிவிக்கப்பட்டது. (சி)

## உயிர் அச்சுறுத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவித்தன.

மொத்தமாக யாழ். நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் 48 பேரும் பருத்தித்துறை நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் 10 பேரும், மல்லாகம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை நீதிமன்றங்களின் உத்தரவின் பேரில் தலா ஒவ்வொருவரும் சரண் அடைந்துள்ளனர்.

ஜூலை மாதம் 10ஆம் திகதிக்கும் நேற்று வரைக்கும் யாழ். நீதிமன்றில் மட்டும் 27 பேர் சரண் அடைந்துள்ளனர்.

இதேவேளை- நேற்றுடன் முடிவடைந்த ஒகஸ்ட் மாதத்தில் 24 பேர் காணாமற் போனதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த மாதத்தில் குடாநாட்டில் 22 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். (அ-1)

## நூட்டுக் காயங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சிகிச்சை முடிந்து ஆஸ்பத்திரி யில் இருந்து வீடு செல்லாமல்,மனிதஉரிமை ஆணைக்குழுவில்நேற்றுமுன்தினம்சரண் அடைந்தார்.

யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா முன் அவர் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## பேசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கையில் ஈடுபட்டனர்.

படுகாயமடைந்த கடற்படைச் சிப்பாய் மன்னார், பொது வைத்தியசாலையில் சிகிச் சைக்காகச் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மற்றப்பட்டிருக்கிறார். (சி)

After A/L
IDM
IDM Computer Studies (Pvt) Ltd.
Affiliated University College
216, Navalar Road, Jaffna. T:P-021-222 9901
www.idm.lk – www.idm.org
இலவச கணனிக் கருத்தரங்கு
A/L மாணவர்களுக்கான விசேட இலவச கணனி கருத்தரங்கு 01-09-2007 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.
அனைவரும் பங்கு பற்றி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்
OPEN GATEWAY FOR HIGHER EDUCATION IN - UK
உங்கள் உயர்படிப்பினை UK சென்று தொடர்வதற்கு திறந்த நுழைவாயில்
IDM

CATWAS.COM Computer Academy
26, Somasundaram Avenue, Chundikuli, Jaffna
E-Mail : catwasomi@sltnet.lk T.P:-021-2223805
A/L மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
Dip. In Microsoft Office
Dip. In Desktop Publishing
Dip. In Hard Ware
புதிவுகள் 02.09.2007 இற்கு முன்னர்
Multimedia with projector மூலம் விரிவுரைகள் நடாத்தப்படும்.
What Next After A/L
Come to be a Best Star
A/L பெறுபேறுகள் கையில் வரும் முன் நீங்கள் ஒரு Diploma கற்கை நெறியை பூர்திசெய்து கணனி உலகிற்கு செல்வதற்கு இன்றே எமது நிறுவனத்துடன் இணைந்து கொள்ளுங்கள்.

## வர்த்தக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரிச்சலுகையை வழங்கியிருக்கின்றது. இதன் காரணமாகவே ஏனைய நாடுகளுடன் போட்டி போட்டுக்கொண்டு தைக்கப்பட்ட ஆடைகளை ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கையால் ஏற்றுமதி செய்ய முடிகின்றது என்றும் -

ஆடைத்தொழிற்சாலைகளும் நஷ்டத்தில் இயங்காமல் கணிசமான வருமானத்தை ஈட்ட முடிகின்றது என்றும் - கூறப்படுகின்றது.

கொழும்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இப்போது, இந்த வரிச் சலுகையை விலக்குவது குறித்துத் தீவிரமாக ஆராயப்படுகின்றது என்றும்-

இதற்கான சிபாரிசு ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக ஆணையாளர் மண்டெல்ஸனினால் பிரேரிக்கப்பட்டிருக்கின்றது என்றும் - தெரிகின்றது.

இவ்வாறு வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் விலக்குமானால் ஏனைய நாடுகளுடன் போட்டி போட்டுக்கொண்டு ஆடைகளை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு இலங்கையால் இயலாமல் போய்விடும் என்றும் -

ஆடை உற்பத்தித் தொழிலே இலங்கையில் படுத்து, பலநூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டு, நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தேக்கநிலை ஏற்படும் என்றும் - எச்சரிக்கப்படுகின்றது.

அவ்வாறான சூழ்நிலை நேர்ந்தால் தற்போது ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் பல்லாயிரக்கணக்கானோர் வேலை இழக்கும் ஆபத்தும் -

வேலையற்றோர் பிரச்சினை மோசமடையும் இக்கட்டும் - நேரும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் இத்தகைய நடவடிக்கை ஒன்றுக்குத் தயாராகி வருவது இலங்கை அரசுத் தலைமைக்குத் தெரியும் என்றும் -

அதைச் சமாளித்து, ஐரோப்பிய ஒன்றியத்தை தற்காலிகமாகவேனும் சமாதானப் படுத்துவதற்கான ஏற்பாடுகளை கொழும்பு ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் 'உதயனு'க்குத் தெரிவித்தன. (சி)

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்.
A/L இந்து நாகரிகம்
A/L 2008 பகுதி II
திங்., புத., வெள்ளி 3.30
A/L 2009 புதிய பிரிவு
சனி, ஞாயிறு 2.30 p.m.
A/L 2008 Paper Class
சனி, ஞாயிறு 4
ஆசிரியர்
S.ஜெயக்குமார்
B.A. (Hons)
ஆரம்பம்: 01.09.2007 சனி.

A/L 2009 & 08
* Phy. Mr.K. செல்வன்
* Che. Mr. M.A. நிரோஜன்
* C/MA. Mr. K.B. மயூரன்
* Bio. Mr. K.G. அன்ரன்
* B.St. Mr. பசில்
* Acc. Mr. தவா
* Econ. Mr. கஜீதரன்
* Tamil Mr. சிவா
SHAMROCK
சுச்ரோரி வை வீதி, யாழ்.

PERSONAL CLASSES
364, Stanly Rd, Jaffna.
துரித மீட்டல்
BA FINAL - 2007
Pol. Sci.-
திரு. பொன் சந்துரு 10 - 11 / 2 - 3
Hin. Cul. -
திரு. சத்தியதாசன் 11 - 12
ஆரம்பம் நாளை ஞாயிறு
தமிழ்:- திரு. தர்மராஜா
(விரைவில் ஆரம்பம்)

SUBRA (14)
சித்தங்கேணி
Spoken English
By
BRITTO
ஆரம்பம்: 04.09.2007
காலை 7.30
Tu. & Thu 7.30 - 8.30
சிங்களம் By.
Prof லீலாக் கிருஷ்ணன்
Sat., - Sun. 7-8

English
Spoken with Grammar
By: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்: 03.09.2007 (திங்கள்)
திங்கள், புதன் வகுப்புகள்
நேரம் : 2 மணி
இடம்: தெல்லிப்பளை, மல்லாகம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.

PHYSICS
2009 அலகு ரீதியான மீட்டல்
சனி, ஞாயி. - 12.30 - 1.30
2008 அலகு ரீதியான மீட்டல்
சனி, ஞாயி. 7 - 8
மின்புலம்
சனி, ஞாயி. 11 - 12.30 ஆரம்பம் இன்று.
தனிப்பாட அனுமதிகளும் வழங்கப்படும்.
By. R. குகன் (New Science Hall and College)

New A.A.C. (Chunnakam)
English
Spoken with Grammar
By. A. BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்: 03.09.2007 திங்கள்
நேரம்: மாலை 3 மணி (திங்கள் புதன் வகுப்புகள்)
A/L 2008, 2009 வகுப்புகள் நடைபெறுகின்றன. Logic S.S.மனோகரன்

ICT Grade 10 English / Tamil
Medium R. Kumaran - B.Sc.
Potpathy Road, Kokuvil
T.P. 0776577359 புதிய பிரிவுகள் ஆரம்பம்.

## ஐ.தே.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டகால கொள்கைகளுக்கும் கட்சியின் யாப்புக்கும் பெரும் சவால் ஏற்பட்டுள்ளது.

''ஜனாதிபதியின் சர்வாதிகாரப் பிடியில் இருந்து ஸ்ரீல. சு. கட்சியைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.'' - என இந்த சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஸ்ரீல. சு. க. மக்கள் பிரிவு இணைந்து உருவாக்கியுள்ள தேசிய சபையின் செயற்திட்டங்கள் தொடர்பாகவும் முன்னாள் ஜனாதிபதியிடம் மேற்படி இருவரும் இச்சந்திப்பின்போது விளக்கினர்.

இவற்றை மிகவும் அவதானத்துடன் கேட்டுக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி, ஸ்ரீல. சு. கட்சியைப் பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் அதேவேளை தேசிய சபையின் எதிர்கால நடவடிக்கைகளுக்குத் தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவார் என உறுதியளித்தார் என்றும் கூறப்பட்டது. (சி)

## உண்ணா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றை அந்த அமைச்சு பூர்த்தி செய்துவிட்டது.

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நிலையில், தம்மை இலங்கைக்கு அனுப்ப வேண்டாம் என்று கோரி, அவரைத் தடுத்து வைத்திருந்த ஹமன் போர்க் தடுப்பு முகாமில் அவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித் தார். அவருக்கு ஆதரவாக, அகதி அந்தஸ்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்த ஏனைய தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 61 ஈழத் தமிழர்களும் உண்ணா விரதப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

தமிழ் அமைப்பினரும், தமிழ் கவுன்ஸி லர்களும் விடுத்த கோரிக்கையின் பேரில் அவர்கள் உண்ணாவிரதத்தை கைவிட்டிருந்தனர்.

இந்நிலையில் ஜூலிட் கிறிஸ்ரியை நாடு கடத்த எடுத்துள்ள நடவடிக்கை, அங்குள்ள ஈழத்தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தி உள்ளது.

உள்துறை அமைச்சின் இந்த நடவடிக் கையை தமிழ் அமைப்புகள் கண்டித்துள்ளன. (அ-1)

INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
RDS Building, K.K.S Road, Mallakam.
TP No : 021 4591920 Website :iitjaffna.com
மாபெரும் புலமைப்பரிசில் - 2007
கணனிக்கற்கைநெறிகளுக்காக IIT வழங்கும் மாபெரும் புலமைப்பரிசில் போட்டிப்பரீட்சை.
அனைவரும் இப்போட்டிப்பரீட்சையில் பங்குபற்றி IIT இன் 90% வரையான புலமைப்பரிசிலை பெற்றுக்கொள்ளலாம்.
காலம் 02.09.2007
பரீட்சைக்கட்டணம் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் பாலசிங்கம்

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பாலசிங்கம் 30.08.2007 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் மயில்வாகனம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் தில்லையம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் திருஞானசம்பந்தர், காலஞ்சென்ற தருமதேவி, பாஸ்கரன் (சண்முகானந்தா புடைவையகம்), ரேணுகாதேவி, காலஞ்சென்ற பிறேமாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருவிளங்கம் (வர்த்தகர் - கொழும்பு), பத்மாவதி, சந்திரா, கணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும் லண்டனை வதிவிடமாகக் கொண்ட பாலகிருஸ்ணன் (பாலா), வானதி, திலீப்குமார், சுபோஜினி, சிறிதேவன், றஜிதா, சுரேஸ்குமார், றோகினி மற்றும் பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), மலைமகள் (ஜேர்மனி), கொழும்பில் வசிப்பவர்களான சிறிகாந்தன், சிறிப்பிரியா, சொரூபன், சிறிகரன், சிறிதரன், சிறிவிஜிதா, சிறிசுசிதா, வாகீசன், பகீதரன், பிரபாகரன், கவிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2007) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1 மணியளவில் நாரந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை கந்தசாமி கோயில் வீதி, நாரந்தனை. (64408)
தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

### நடராஜலிங்கம் கேமலன் (மயூரன்)



எழுதுமட்டுவாளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட நடராஜலிங்கம் கேமலன் (மயூரன்) அகால மரணமானார்.

அன்னார் நடராஜலிங்கம் - தெய்வீகநாயகி தம்பதியரின் அருமை மகனும், ஜெயரதியின் பாசமிகு கணவரும், கிந்துஷன், மதுஷான் ஆகியோரின் தந்தையும், கேசவன் (சுவிஸ்), கேதரன் (லண்டன்), கேதினி ஆகியோரின் சகோதரனும் மகாலிங்கம் J.P. (மகான்), தங்கரத்தினம் ஆகியோரின் மருமகனும், சதீஸ்குமார், சிவவதனி, கிருபாலினி ஜெயந்தி (லண்டன்), ஜெயந்தன் (லண்டன்), ஜெயபாலன் (லண்டன்), ஜெயமோகன், ஜெயபாரதி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2007) சனிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
எழுதுமட்டுவாள் தெற்கு.
தற்காலிக முகவரி
சரசாலை தெற்கு, சாவகச்சேரி. (64423)

தகவல்:
சி. நடராஜலிங்கம் (தந்தை),
வ. மகாலிங்கம் (மாமன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org